CCE-II-RR/PR/NSR/NSPR(B)/999/8053

**B**

**ಜೂನ್ 2024 ರ ಪರೀಕ್ಷೆ - 2**

**JUNE 2024 EXAMINATION - 2**

ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 12 ]
Total No. of Printed Pages : 12 ]

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 38 ]
Total No. of Questions : 38 ]

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 85-T**
**Code No. : 85-T**

**CCE RR/PR/ NSR/NSPR**
**Reduced Syllabus**

Question Paper Serial No.

# ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ

## Subject : SOCIAL SCIENCE (சமூக அறிவியல்)

**(ತಮಿಳು ಮಾಧ್ಯಮ / Tamil Medium)**

**(ಶಾಲಾ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಖಾಸಗಿ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಎನ್.ಎಸ್.ಆರ್. / ಎನ್.ಎಸ್.ಪಿ.ಆರ್.)**
**(Regular Repeater / Private Repeater / NSR / NSPR)**

ದಿನಾಂಕ : 22. 06. 2024 ] [ Date : 22. 06. 2024
ಸಮಯ : ಬೆಳಗ್ಗೆ 10-15 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 1-30 ರವರೆಗೆ ] [ Time : 10-15 A.M. to 1-30 P.M.
ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 80 ] [ Max. Marks : 80

**பொதுவான குறிப்புகள் :**

**Cut here/ಇಲ್ಲಿ ಕತ್ತರಿಸಿ**

1. இந்த வினாத்தாள் வினாக்கள் 38-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது ( Sealed by reverse jacket ) நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும் பொழுது **வலக்கைப் பக்க ஓரத்தை பிரித்து திறக்க வேண்டும் (அம்புகுறியிட்டு காட்டியுள்ளபடி). இடது பக்க ஓரத்தை பிரிக்கக்கூடாது.** வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணவர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.
6. மாணவர்கள் தங்கள் தேர்வு அனுமதிச்சீட்டில் ( Admission Ticket ) உள்ள குறியீடும், வினாத்தாளின் குறியீடும் ஒரே மாதிரியாக உள்ளதா என்பதை சரிபார்க்கவும்.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**22. 06. 2024**

**Tear here**

**I. <u>பின்வரும் வினாக்கள்/மற்றும் முழுமைப்பெறாத கூற்றுகளுக்கு *நான்கு* மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும் :</u>**

**8 × 1 = 8**

1. திவானி அதாலத் என்னும் குற்றவியல் நீதிமன்றங்களை ஏற்படுத்தியவர்

   (A) கார்ன்வாலிஸ்

   (B) வாரன் ஹேஸ்டிங்ஸ்

   (C) வெல்லெஸ்லி

   (D) டல்ஹௌசி

2. இரண்டாம் ஆங்கிலோ-மைசூர் போருக்கான முக்கிய காரணம்

   (A) ஆங்கிலேயர்கள் மாஹேவை கைப்பற்றினர்

   (B) ஆங்கிலேயர்கள் ஸ்ரீரங்கப்பட்டின ஒப்பந்ததின் நிபந்தனைகளை மீறினர்

   (C) ஆங்கிலேயர்கள் கார்வர் மற்றும் கோயம்புத்தூரையும் கைப்பற்றினர்

   (D) ஆங்கிலேயர்கள் மங்களூர் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை மீறினர்.

3. இந்திய வெளியுறவுக் கொள்கை இவரால் உருவாக்கப்பட்டது

(A) சர்தார் வல்லபாய் படேல்

(B) டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார்

(C) மோதிலால் நேரு

(D) ஜவஹர்லால் நேரு

4. இந்தியாவில் பழமைவாய்ந்த துறைமுகம்

(A) விசாகப்பட்டணம்

(B) மர்மகோவா

(C) சென்னை

(D) நியூமங்களூர்

5. அரசியலைமப்பின் 17வது சட்டபிரிவின் முக்கியத்துவம்

(A) குழந்தை தொழிலாளர் தடைச்சட்டம்

(B) தீண்டாமை ஒழிப்பு

(C) எழுத்தறிவின்மை ஒழிப்பு

(D) வரதட்சணை தடைச்சட்டம்

6. நர்மதா பச்சாவோ அந்தோலனின் தலைவர்

(A) மேதா பட்கர்

(B) சுந்தர்லால் பகுகுணா

(C) டாக்டர் சிவராம்காரந்த்

(D) ஷ்யாமாஜி கிருஷ்ணவர்மா

7. ‘‘இந்தியாவின் உண்மையான வளர்ச்சி அதன் கிராமங்களின் வளர்ச்சி’’ இதை கூறியவர்

(A) அமர்த்தியா சென்

(B) மகாத்மா காந்தி

(C) தாதாபாய் நௌரோஜி

(D) சி.ஆர். தாஸ்

8. ரமேஷிற்கு ஐந்து வயது நிரம்பிய மகள் இருக்கிறார். எதிர்காலத்தில் மகளின் திருமணத்திற்காக பணத்தை சேமிக்க தீர்மானித்தார். இதற்கு பொருத்தமான வங்கி கணக்கு

(A) சேமிப்புக்கணக்கு

(B) நடப்புக் கணக்கு

(C) தொடர்வைப்புக் கணக்கு

(D) கால வைப்புக் கணக்கு.

**II.** **பின்வரும் வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளிக்கவும் :**

**8 × 1 = 8**

9. சத்யார்த்த பிரகாஷ் என்ற நூலை எழுதியவர் யார் ?

10. பிரான்சிஸ்கோ டி அல்மேடா ஏன் நீல நிற நீர் கொள்கையை அமுல்படுத்தினார் ?

11. சமுதாயபடிநிலைமுறை எவ்வாறு உருவாகிறது ?

12. வகுப்புவாதம் என்றால் என்ன ?

13. மும்பை இந்தியாவின் மான்செஸ்டர் என்று ஏன் அழைக்கப்படுகிறது ?

14. இந்தியாவில் மார்ச் மற்றும் மே மாதங்களில் வெப்பநிலை ஏன் அதிகமாக உள்ளது ?

15. ‘‘அதிகாரப் பகிர்ந்தளித்தல்’’ என்றால் என்ன ?

16. இந்திய ரிசர்வ் வங்கியை வங்கியாளர்களின் வங்கி என்று ஏன் அழைக்கப்படுகிறது ?

**III.** <u>பின்வரும் வினாக்களுக்கு இரண்டிலிருந்து நான்கு வாக்கியங்கள் வரை விடையளிக்கவும் :</u> **8 × 2 = 16**

17. இந்திய வெளியுறவுக் கொள்கையின் நோக்கங்கள் என்ன ?

*அல்லது*

வேலையில்லா திண்டாட்டத்திற்கான காரணங்கள் என்ன ?

18. ''அப்பிகோ இயக்கத்தை'' விளக்கவும்.

*அல்லது*

சமுதாய படிநிலை முறைகளின் பல்வேறு அமைப்புக்களை விளக்குக.

19. முதல் ஆங்கிலோ-மராட்டிய போரின் காரணங்கள் என்ன ?

20. ஜூனாகத் இந்திய யூனியனுடன் எவ்வாறு இணைக்கப்பட்டது ?

21. சமீப காலமாக மண் அரிப்பு அதிகரித்து வருகிறது. ஏன் ?

22. இந்தியாவில் நீர்ப்பாசனம் மிகவும் இன்றியமையாதது. ஏன் ?

23. தனிநபர் வருமானம் ஒரு நாட்டின் வளர்ச்சியின் சரியான அளவீடாக இருக்க இயலாது. ஏன் ?

24. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 15 ஆம் தேதி உலக நுகர்வோர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. ஏன் ?

**IV.** **பின்வரும் வினாக்களுக்கு ஆறு வாக்கியங்களில் விடையளிக்கவும் :**

**9 × 3 = 27**

25. ராணி சென்னம்மாவின் பெயருடன் சங்கொள்ளி ராயண்ணாவின் பெயரும் பிரபலமாக நினைவுப் படுத்தப்பட்டு வருகிறது. எப்படி ?

***அல்லது***

இந்திய சமுதாய சீர்திருத்தத்தில் ராஜாராம் மோகன்ராயின் பங்கு மறக்க இயலாதது. நியாயப்படுத்துக.

26. இந்தியாவில் கடைப்பிடிக்கப்படும் வேளாண்மை வகைகளை பட்டியலிடுக.

*அல்லது*

இந்தியாவின் தொழில்துறை மண்டலங்களை பட்டியலிடுக.

27. கிராமப்புற வளர்ச்சியில் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆதாரப்படுத்துக.

*அல்லது*

பெண்கள் சுயஉதவி குழுக்கள், பெண்களுடைய மேம்பாட்டிற்கு ஆதரவாக உள்ளன. இதனை நியாயப்படுத்துக.

28. வங்கிகளின் செயல்பாடுகள் யாவை ?

*அல்லது*

வங்கிகளின் பண்புகள் யாவை ?

29. ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகள் யாவை ?

30. இந்தியாவிற்கு புதிய கடல் வழி கண்டுபிடிப்பிற்கான காரணங்கள் என்ன ?

31. ரஷ்யா பல சூழ்நிலைகளில் இந்தியாவிற்கு ஆதரவாக உள்ளது. எப்படி ?

32. முறைப்படுத்திய பிரிவு தொழிலாளர்களுக்கு என்னென்ன சலுகைகள் அளித்துள்ளன ?

33. காடுகளைப் பாதுகாக்கும் முறைகளை விளக்கவும்.

V. **பின்வரும் வினாக்களுக்கு எட்டு வாக்கியங்களில் விடையளிக்கவும் :**
**4 × 4 = 16**

34. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தீவிரவாதிகளின் பங்களிப்பை விளக்கவும்.

*அல்லது*

இந்தியாவில் ஆங்கிலேய கல்வி முறையின் விளைவுகளை விளக்கவும்.

35. முதல் இந்திய சுதந்திரப் போர் பல்வேறு காரணங்களினால் தோல்வியடைந்தது. நியாயப்படுத்தவும்.

36. பெண்களின் நிலையை மேம்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

37. நிலநடுக்கத்திற்கான காரணங்களையும் அதன் விளைவுகளையும் குறிப்பிடவும்.

**VI.** 38. <u>இந்திய தரைப் ( **Outline** ) படத்தை வரைந்து கீழ்க்காண்பவற்றைக் குறிக்கவும்.</u> **1 + 4 = 5**

a) காண்ட்லா

b) கொங்கன் துறைமுகம்

c) ஹிராகுட் திட்டம்

d) அமிர்தசரஸ்.

<u>*பார்வைத் திறன் அற்றோர்க்கான வினா :* **(வினா எண் 38 க்கான மாற்று வினா)**</u> **5**

பல்நோக்கு நதி பள்ளத்தாக்கு திட்டத்தின் முக்கிய நோக்கங்களை குறிப்பிடுக.

DO NOT WRITE ANYTHING HERE